# ‘ஊடகச் சட்டங்கள் இருந்தாலும் செய்தியாளர்கள் நிபுணத்துவ முறையில் பணியாற்ற முடியும்’

சிங்கப்பூரிலும் சரி வேறு இதர சமூகங்களிலும் சரி கருத்துகளைத் தெரிவிக்க தடையற்ற சுதந்திரம் கிடையாது.

ஊடகத்தை ஒழுங்கு படுத்த சட்டங்கள் இருக்கின்றன.

இந்த நிலையிலும் சிங்கப்பூர் ஊடகம் நல்ல நிபுணத்துவப் பணியை ஆற்ற அதிக வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பணியை அது ஆற்றி வருகிறது என்று செய்தித் துறையில் பழுத்த அனுபவம் வாய்ந்த திரு பேட்ரிக் டேனியல் தெரிவித்து இருக்கிறார்.




சட்டங்களின் வரம்புக்கு உட்பட்டு பணியை ஆற்றுவதே சிங்கப்பூர் ஊடகத்தின் சவால் என்று ஊடகத் துறையில் பழுத்த அனுபவமுள்ள திரு பேட்ரிக் டேனியல் தெரிவித்துள்ளார். **படம்: கொள்கை ஆய்வுக் கழகம்**

கொள்கை ஆய்வுக் கழகத்தின் மூன்று விரிவுரைகளில் முதல் விரிவுரையை, சிங்கப்பூரை ஆராய்வதற்கான எஸ் ஆர் நாதன் ஆய்வாளர் என்ற முறையில் திரு டேனியல் நேற்று உரை ஆற்றினார்.

எஸ்பிஎச் மீடியா டிரஸ்ட் நிறுவனத்தின் இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி வரும் திரு டேனியல், தனிப்பட்ட முறையில் தான் உரையாற்றுவதாகக் குறிப்பிட்டார்.

ஊடகத்தின் பணி பற்றியும் அது கொண்டுள்ள சுதந்திரம் குறித்தும் ஐந்து கேள்விகளை திரு டேனியல் முன்வைத்தார்.

ஊடகம் நல்ல நிபுணத்துவப் பணியைச் செய்வதற்கு சட்டங்கள் அனுமதிக்கின்றனவா; பொறுப்புள்ள கண்காணிப்புப் பணிக்கு வாய்ப்பு உள்ளதா; ஊடகம் நாட்டு உருவாக்கப் பணியை ஆற்ற வேண்டுமா; யோசனைகளுக்கான சந்தை; அதிக அளவிலான பன்மய கருத்துகள், கண்ணோட்டங்களை அனுமதிக்க தேவைப்படும் மாற்றங்கள் யாவை ஆகிய கேள்விகளை திரு டேனியல் முன் வைத்தார்.

சிங்கப்பூரின் செய்தித்தாட்கள் மற்றும் ஒளிபரப்பாளர்களின் உரிமை நிர்வாகம் மற்றும் நிதி வளம் ஆகியவற்றை ஒழுங்கு படுத்துவதற்கான பல்வேறு சட்டங்கள் பற்றி குறிப்பிட்ட திரு டேனியல், அத்தகைய சட்டங்களின் வரம்புக்கு உட்பட்டு தன்னுடைய பணியை ஆற்ற வேண்டி இருப்பதே சிங்கப்பூர் ஊடகத்தின் சவால் என்றார்.

“சட்டங்கள் இருந்தாலும் நம் ஊடகத்தில் நூற்றுக்கணக்கான செய்தியாளர்கள், நல்ல செய்தியாளர்கள் நம் ஊடகத்தில், செய்தி அறைகளில் இருக்கிறார்கள்.

“அவர்கள் அன்றாடம் நல்ல தரமான பொருள்பொதிந்த பணிகளை ஆற்றி வருகிறார்கள்,” என்று திரு டேனியல் குறிப்பிட்டார்.

பொறுப்புள்ள கண்காணிப்புப் பணிக்கு வாய்ப்பு இருக்கிறதா என்பது பற்றி கருத்துரைத்த அவர், இருக்கிறது என்று தான் நம்புவதாக கூறினார்.

இருந்தாலும் அது ஒன்றே ஊடகத்தின் பணியாக இருக்க இயலாது என்றார் அவர்.

சமூகம் அல்லது நாட்டு உருவாக்கப் பணியை ஊடகம் ஆற்ற வேண்டுமா என்பது பற்றி கருத்துரைத்த திரு டேனியல், அதற்கு சிங்கப்பூர் ஊடகம் எதிரானது அல்ல என்றார்.

இருந்தாலும் அது ஒன்றே அதன் பணியாக இருக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

எடுத்துக்காட்டாக, கொவிட்-19 தொற்றின்போது ஊடகம் சமூகப் பணியாற்றியதை திரு டேனியல் குறிப்பிட்டார்.

யோசனைகளின் சந்தை இடம் என்ற எண்ணம் குறித்து கருத்து கூறிய அவர், இளைய மற்றும் முதிய சிங்கப்பூரர்களிடையே அதிக பன்மய கருத்து, கண்ணோட்டங்களுக்கான விருப்பம் அதிகமாகி வருகிறது என்று தெரிவித்தார்.

பன்மய கண்ணோட்டங்கள் அதிகரிக்க என்னென்ன மாற்றங்கள் தேவை என்பது பற்றி குறிப்பிட்ட திரு டேனியல், நடுநிலையான வழி ஒன்றைத் தேர்ந்தெடுப்பது எப்படி என்பதும் பன்மயத்திற்கும் நியாயத்திற்கும் பாடுபடுவது எப்படி என்பதுமே சவால் என்றார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.